# தொழில்

வேலைச் சந்தையில் நுழைதல்
வேலை தேடி கண்டுபிடித்தல்
உரிமைகளும் கடமைகளும்
வேலையின்மை காப்பீடு
டிப்ளோமாக்களின் அங்கீகாரம் மற்றும் முந்தைய கற்றலின் சரிபார்ப்பு

# வேலைச் சந்தையில் நுழைதல்

வேலை செய்வதற்கான அல்லது தொழில் தொடங்குவதற்கான உங்கள் உரிமைகள், உங்கள் பர்மிட் மற்றும் சுவிட்சர்லாந்திற்கு வருவதற்கான காரணங்களைப் பொறுத்து மாறுபடும். எல்லா சந்தர்ப்பங்களிலும், நீங்கள் சமூகக் காப்பீட்டில் பதிவு செய்து வரிகளை செலுத்த வேண்டும்.

## வேலை பர்மிட்

பொதுவாக, உங்கள் குடியிருப்பு அனுமதியைப் பெறும்போது வேலை பர்மிட்டுக்கான விண்ணப்பம் செயல்படுத்தப்படும்.
பொதுவாக, சுவிட்சர்லாந்தில் குடியிருப்பு அனுமதி பெறும் நபர்களுக்கு வேலை செய்யும் உரிமை உண்டு.
வேலை பர்மிட்டுக்கு யார் விண்ணப்பிப்பது? நபரின் நிலை மற்றும் அவர்களின் பணிக்காலத்தைப் பொறுத்து, விண்ணப்பம் நிறுவனம் அல்லது நபரால் செய்யப்படுகிறது.
உங்கள் குடியிருப்பு அனுமதி மற்றும் உரிமைகள் குறித்து ஏதேனும் கேள்விகள் இருந்தால், canton du Jura (ஜூரா காந்தோனின்) Service de la population (SPOP) (மக்கள் தொகைத் துறையை) மற்றும் Service de l'économie et de l'emploi (SEE) (பொருளாதாரம் மற்றும் வேலைவாய்ப்புத் துறையை) நீங்கள் தொடர்பு கொள்ளலாம். சுவிச்சர்லாந்தில் இன்னும் வசிக்காதவர்களுக்கும் இங்கு வேலை செய்ய விரும்புவோருக்கும் இந்த துறைகள் ஆலோசனை வழங்குகின்றன.
உங்களிடம் [அகதி அந்தஸ்து] (93811) உடனோ அல்லது இல்லாமலோ B (அகதி) பர்மிட் அல்லது F பர்மிட் உள்ளதா? வேலை செய்ய உங்களுக்கு சிறப்பு அங்கீகாரம் தேவையில்லை. இருப்பினும், உங்கள் நிறுவனம் உங்கள் வேலையின் தொடக்க மற்றும் முடிவை அதிகாரப்பூர்வ படிவத்தைப் பயன்படுத்தி காந்தோனிற்கு அறிவிக்க வேண்டும். அது நீங்கள் பணிபுரியும் காந்தோனிற்கு அதை அறிவிக்க வேண்டும். இந்த அறிவிப்பு இலவசம். இது அறிவிப்பு செயல்முறை என்று அழைக்கப்படுகிறது.
நீங்கள் N பர்மிட் பெற்ற புகலிடக் கோரிக்கையாளரா?
வேலை செய்ய, உங்களுக்கு Service de la population (SPOP) (மக்கள் தொகைத் துறை) et le Service de l'économie et de l'emploi (SEE) (பொருளாதாரம் மற்றும் வேலைவாய்ப்புத் துறை). ஆகியவற்றின் அங்கீகாரம் தேவை

## நீங்கள் சுவிஸ் நாட்டவரா? அல்லது உங்களிடம் C பர்மிட் உள்ளதா? மேலும் நீங்கள் சொந்த தொழிலைத் தொடங்க விரும்புகிறீர்களா?

சுவிட்சர்லாந்தில், சுவிஸ் நாட்டவர்களும் C பர்மிட் பெற்றவர்களும் சொந்த தொழிலைத் தொடங்கலாம். அவ்வாறு செய்ய, அவர்களுக்கு அங்கீகாரம் தேவையில்லை. அவர்கள் வழக்கமான செயல் முறையைப் பின்பற்றுகிறார்கள்.
காந்தோனின் Promotion économique (பொருளாதார மேம்பாட்டுத் துறை) தனிநபர்கள் சொந்தத் தொழிலைத் தொடங்குவதற்கு ஆலோசனை வழங்கி ஆதரிக்கிறது.

## உங்களிடம் வேறு பர்மிட் உள்ளதா? மேலும் நீங்கள் சொந்த தொழிலைத் தொடங்க விரும்புகிறீர்களா?

பிற பர்மிட்களைக் கொண்ட நபர்களுக்கு, உங்கள் பர்மிட் மற்றும் குடியிருப்பு அனுமதியைப் பொறுத்து நிலைமை மாறுபடும்.
நீங்கள் Service de la population (SPOP) (மக்கள் தொகைத் துறையை). தொடர்பு கொள்ள வேண்டும். இந்தத் துறை உங்கள் திட்டத்தை ஆராய்ந்து, அது திடமானதா மற்றும் சாத்தியமானதா என்பதை மதிப்பிடுகிறது. அது தொழிலைத் தொடங்க முடியுமா என்பதை உறுதிப்படுத்துகிறது.
காந்தோனின் Promotion économique (பொருளாதார மேம்பாட்டுத் துறை) உங்களுக்கு நிறுவன உருவாக்கம் மற்றும் அனுமதி விண்ணப்பங்களில் ஆலோசனை வழங்கவும் உதவவும் முடியும்.

## அறிவிக்கப்படாத வேலை

வேலை செய்யும் ஒவ்வொருவருக்கும் வேலை பர்மிட் இருக்க வேண்டும்.
அது சமூகப் காப்பீடு நிறுவனத்தில் பதிவு செய்யப் படவேண்டும். மேலும் அவர் தனது வருமானத்தை வருமானவரி அலுவலகத்தில் அறிவிக்க வேண்டும். அவர் இதைச் செய்யாவிட்டால், அவர் சட்டத்தால் தண்டிக்கப்படலாம்.
இது அறிவிக்கப்படாத வேலை என்று அழைக்கப்படுகிறது.
ஒருவர் அறிவிக்கப்படாத வேலை செய்தால், அவரின் நிறுவனமும் சட்டத்தால் தண்டிக்கப்படலாம்.
ஒருவர் அறிவிக்கப்படாத வேலை செய்யும் போது, அவர் விபத்து காப்பீடு இன் கீழ் வரமாட்டார். மேலும் அவர் கட்டாய சமூக காப்பீடு (AVS-ஓய்வு, AI-இயலாமை, மகப்பேறு மற்றும் வேலையின்மை) ஆகியவற்றிற்கு சந்தா செலுத்தாததால், அவருக்கு அவற்றுக்கு உரிமை இல்லை.
உங்கள் நிறுவனம் உங்களை முறையாக வேலைக்கு அமர்த்தவில்லை என்று நினைக்கிறீர்களா? நீங்கள் Service de l’économie et de l’emploi (SEE) (பொருளாதாரம் மற்றும் வேலைவாய்ப்புத் துறையை) அதன் தொடர்பு படிவம் மூலமோ அல்லது Conseil de prud'hommes (தொழிலாளர் நீதிமன்றம்) . மூலமோ மூலம் தொடர்பு கொள்ளலாம்.

## வேலை மற்றும் சிறார்கள்

பொதுவாக, சிறார்கள்15 வயதிலிருந்தே வேலை செய்யலாம். சிறிய வேலைகளுக்கு (எ.கா., விடுமுறை கால வேலை), இது 13 வயதிலிருந்தே அனுமதிக்கப்படுகிறது.
பெரியவர்கள் (பெற்றோர் மற்றும் நிறுவனங்கள்) சிறார்களை அதிக கடினமான வேலைகளைச் செய்யச் சொல்லாமல் கவனமாக இருக்க வேண்டும். 18 வயதுக்குட்பட்ட சிறார்களின் வேலைக்கு சிறப்பு விதிமுறைகள் உள்ளன. ஆபத்தான வேலை, இரவு வேலை மற்றும் ஞாயிற்றுக்கிழமை வேலைகள் தடைசெய்யப்பட்டுள்ளன.
இந்தப் பணி சிறார் தொழில் பயிற்சியின் ஒரு பகுதியாக இல்லாவிட்டால் ஒழிய.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.bonjour-jura.ch/ta/travail/arriver-sur-le-marche-du-travail

# வேலை தேடி கண்டுபிடித்தல்

வேலை தேடுவதற்கு சிறந்த வாய்ப்பைப் பெற, நல்ல கல்வியைப் பெற்றிருப்பது மிகவும் முக்கியம். வேலை தேட, நீங்கள் ஆன்லைனில், செய்தித்தாள்களில் பார்க்கலாம் அல்லது ஒரு நிறுவனத்திடம் நேரடியாகக் கேட்கலாம். உங்கள் விண்ணப்பத்தில், ஒரு CV, ஒரு ஆர்வக் கடிதம் மற்றும் சான்றிதழ்களை அனுப்ப வேண்டும்.

## வேலை செய்ய உங்களுக்கு என்ன தேவை

சுவிட்சர்லாந்தில் கல்வி மிகவும் மதிப்புமிக்கது. கிட்டத்தட்ட ஒவ்வொரு தொழிலுக்கும் நல்ல கல்வி முக்கியம்.
வெளிநாட்டு டிப்ளோமாக்கள் எப்போதும் அங்கீகரிக்கப்படுவதில்லை.
வேலை தேடும் போது, முந்தைய நிறுவனத்திடமிருந்து வேலை அனுபவ சான்றிதழ்களும் மிக முக்கியம்.
குறிப்பு: வேலையை விட்டு வெளியேறும் போது, எப்போதும் வேலை அனுபவ சான்றிதழைக் கேளுங்கள்.
பெரும்பாலான வேலைகளுக்கு, பிரெஞ்சு மொழியை நன்கு புரிந்துகொள்வது நன்மை.

## வேலை தேடுதல்

வேலை வாய்ப்புகள் செய்தித்தாள்களிலும் பல்வேறு வலைத்தளங்களிலும் வெளியிடப்படுகின்றன.
தனியார் வேலைவாய்ப்பு நிறுவனங்களும் உள்ளன.
வேலை தேடுகிறீர்களா?
நீங்கள் Offices régionaux de placement (ORP) (பிராந்திய வேலைவாய்ப்பு அலுவலகங்களில்) உதவியைப் பெறலாம். அங்கே கணினிகள் மற்றும் செய்தித்தாள்கள் கிடைக்கின்றன, மேலும் ஊழியர்கள் உங்களுக்கு ஆலோசனை வழங்குகிறார்கள்.
**[illegible]**
சுவிட்சர்லாந்தில், ஏதேனும் காலியிடங்கள் உள்ளதா என தொலைபேசி மூலமாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ ஒரு நிறுவனத்திடம் எளிதாகக் கேட்கலாம். நிறுவனம் ஒரு பதவியை விளம்பரப்படுத்தாவிட்டாலும் கூட இது பொருந்தும். இது தன்னிச்சை வேலைவாய்ப்பு வழங்கல் என்று அழைக்கப்படுகிறது.

## விண்ணப்பம்

பொதுவாக, வேலைக்கான விண்ணப்பத்தை எழுத்துப்பூர்வமாக அனுப்ப வேண்டும். இது வேலை இருப்பதாக எண்ணி விண்ணப்பத்தல் என்றும் அழைக்கப்படுகிறது. ஒரு விண்ணப்பத் தொகுப்பில் (அல்லது வேலை விண்ணப்பத்தில்) குறைந்தபட்சம் உங்கள் சுயவிவரம் (CV), ஒரு ஆர்வக் கடிதம், பயிற்சி சான்றிதழ்கள் மற்றும் டிப்ளோமாக்களின் நகல்கள் மற்றும் பணி அனுபவ சான்றிதழ்கள் ஆகியவை இருக்க வேண்டும்.
நிறுவனத்திற்கு உங்கள் விண்ணப்பத்தின் மீது ஆர்வம் இருந்தால், உங்களை ஒரு நேர்காணலுக்கு அழைப்பார்கள்.
பாஸ்கூர் (Bassecourt)ல் EFEJ (Espace Formation Emploi Jura) (ஜூரா பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு இடம்) வில் உள்ள வேலைச் சந்தை அலுவலகம் உங்கள் விண்ணப்பத்தைத் தயாரிப்பதற்கு இலவச உதவி வழங்குகிறது.

மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.bonjour-jura.ch/ta/travail/chercher-et-trouver-du-travail

# உரிமைகளும் கடமைகளும்

பணியாளர்களுக்கும் நிறுவனங்களுக்கும் வெவ்வேறு உரிமைகளும் கடமைகளும் உள்ளன. எடுத்துக்காட்டாக, அதிகபட்ச வேலை நேரம், விடுமுறை உரிமை மற்றும் காப்பீட்டுத் தொகை ஆகியவை சட்டத்தால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

## வேலை ஒப்பந்தம்

வேலைவாய்ப்பு ஒப்பந்தங்கள் பொதுவாக எழுத்துப்பூர்வமாக கையொப்பமிடப்படுகின்றன. ஆனால் வாய்மொழி ஒப்பந்தமும் செல்லுபடியாகும்.
வேலைவாய்ப்பு தொடர்பான விதிகள் கடமைகள் சட்டத்தில் காணப்படுகின்றன. இந்த ஆவணம் தொழிலாளர் சட்டத்தில் மதிக்கப்பட வேண்டிய குறைந்தபட்ச தரநிலைகளை (குறைந்தபட்ச விதிகளை) கொடுக்கிறது.
இதன் காரணமாக, எழுதப்பட்ட வேலைவாய்ப்பு ஒப்பந்தம் இல்லாதவர்களுக்கு கூட உரிமைகள் உள்ளன, அதே நேரத்தில் கடமைகளும் உள்ளன.

## ஊழியர்களின் உரிமைகள் மற்றும் கடமைகள் மற்றும் முதலாளிகளின் கடமைகள்

சுவிட்சர்லாந்தில், ஊழியர்களுக்கு உரிமைகள் மற்றும் கடமைகள் உள்ளன.
அவற்றில் மிக முக்கியமானவை:

- காப்பீட்டு உரிமை: நிறுவனங்கள் தங்கள் ஊழியர்களை சமூகக் காப்பீட்டில் பதிவு செய்ய வேண்டும். அது அவர்களுக்காக விபத்து காப்பீடு எடுத்து பிரீமியங்களில் ஒரு பகுதியை செலுத்த வேண்டும்.
- அனைத்து ஊழியர்களுக்கும் குறைந்தது 4 வாரங்கள் ஊதியத்துடன் கூடிய விடுமுறைக்கு உரிமை உண்டு (20 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கு 5 வாரங்கள்). இது நேரத்தைப் பொறுத்து ஊதியம் பெறுபவர்களுக்கும் அல்லது பகுதிநேர வேலை செய்பவர்களுக்கும் பொருந்தும்.
- வாரத்திற்கு அதிகபட்ச வேலை நேரம் 50 மணிகள் ஆகும். பல தொழில்களில், இது 45 மணிகள் ஆகும்.
- ஊழியர்கள் எழுத்துப்பூர்வ பணிச் சான்றிதழைப் பெற உரிமை உண்டு.
- நோய்வாய்ப்பட்ட ஒருவருக்கு ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு சம்பளம் கிடைக்கும்.
- கர்ப்பிணிகள் மற்றும் பிரசவித்த பெண்களுக்கு சிறப்பு உரிமைகள்] (90340) உண்டு.
- ஊழியர்கள் தாங்கள் ஏற்றுக்கொண்ட வேலையைத் தாங்களே செய்ய வேண்டும்.
- அவர்கள் வேலையை கவனமாகச் செய்து தங்கள் நிறுவனத்தின் நலன்களைப் பாதுகாக்க வேண்டும்.
- தங்கள் நிறுவனத்தின் நலன்களைப் பாதுகாக்க, ஊழியர்கள் ரகசியத்தன்மையை மதிக்க வேண்டும். அவர்கள் தங்கள் வேலையின் போது கற்றுக்கொண்ட ரகசியத் தகவல்களை (உற்பத்தி அல்லது வர்த்தக ரகசியங்கள் போன்றவை) மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளக்கூடாது. தேவைப்பட்டால், ஒப்பந்தம் முடிந்த பிறகும் இது பொருந்தும்.
- வேலைவாய்ப்பு உறவுகளில், நிறுவனம் தனது ஊழியர்களின் [ஆளுமை ஐ மதித்து பாதுகாக்கும். . அவர்களின் ஆரோக்கியத்தையும் ஒழுக்கத்திற்கான மரியாதையையும் அது உறுதி செய்கிறது. குறிப்பாக, பாலியல் துன்புறுத்தலுக்கு எதிராக அவர்களின் பாதுகாப்பை அது உறுதி செய்கிறது.

உங்கள் உரிமைகள் மதிக்கப்படுவது குறித்து உங்களுக்கு சந்தேகமா?
நீங்கள் Service de l'économie et de l'emploi (SEE) (பொருளாதாரம் மற்றும் வேலைவாய்ப்புத் துறையை) , ஒரு தொழிற்சங்கத்தை அல்லது Conseil de Prud'hommes (தொழிலாளர் நீதிமன்றத்தை) . தொடர்பு கொள்ளலாம்.

## சம்பளம்

சுவிஸ் சட்டம் குறைந்தபட்ச ஊதியத்தை வரையறுக்கவில்லை.
ஆனால் ஜூரா காந்தோனில், அது உள்ளது.
ஜூராவில், CHF 21.40 ஐ விட குறைவான மணிநேர ஊதியத்தை வழங்க உங்களுக்கு அனுமதி இல்லை.
ஒரே வேலைக்கு, பெண்களும் ஆண்களும் ஒரே ஊதியத்திற்கு உரிமை உண்டு.
சில கூட்டு பேர ஒப்பந்தங்கள் (CCT) ஒரு குறிப்பிட்ட துறைக்கு குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிக்கின்றன. பல துறைகள் கூட்டு பேர ஒப்பந்தத்தில் (CCT) கையெழுத்திட்டுள்ளன.
மொத்த சம்பளம் என்பது வேலைவாய்ப்பு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளம்.
நிகர சம்பளம் என்பது சமூகக் காப்பீடு பங்களிப்புகளைக் கழித்த பிறகு மீதமுள்ள சம்பளம்.

## ஒப்பந்தத்தை முடித்தல் (அல்லது நிறுத்துதல்)

வேலை ஒப்பந்தம் முடிவடைந்தால், நிறுவனங்களும் ஊழியர்களும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணிநீக்க காலக்கெடுவை மதிக்க வேண்டும்.
முன் அறிவிப்பு அல்லது அறிவிப்பு இல்லாமல் உடனடி பணிநீக்கங்கள் அனுமதிக்கப்படாது. விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் தவிர.
நிறுவனம் ஒப்பந்தத்தை நிறுத்தும்போது, அது பணிநீக்கம் என்று அழைக்கப்படுகிறது.
பணிநீக்கத்திற்கான காரணங்களை எழுத்துப்பூர்வமாகப் பெறுவது எப்போதும் சாத்தியமாகும். இதைச் செய்ய, நீங்கள் உங்கள் நிறுவனத்திடம் அதைக் கோர வேண்டும்.
நோய்வாய்ப்பட்டவர்கள், விபத்துக்குள்ளானவர்கள், கர்ப்பமாக இருப்பவர்கள் அல்லது பிரசவித்தவர்கள் பணிநீக்கத்திலிருந்து சிறப்பாகப் பாதுகாக்கப்படுகிறார்கள்.
சரியான காரணங்கள் இல்லாமல் நியாயமற்ற பணிநீக்கங்களை நீதிமன்றத்தின் முன் கொண்டுவரலாம்.
ஊழியர் தன் ஒப்பந்தத்தை முடித்துக்கொண்டால், அது ராஜினாமா என்று அழைக்கப்படுகிறது.
வேலையின்மை காப்பீடு (அபராத நாட்கள்) பெறுவதற்கான உரிமையில் ராஜினாமா விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். அதனால் அவர் குறைவான வேலையின்மை சலுகைகளைப் பெறுகிறார்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.bonjour-jura.ch/ta/travail/les-droits-et-les-obligations

# வேலையின்மை காப்பீடு

அனைத்து ஊழியர்களும் வேலையின்மைக்கு எதிராக காப்பீடு செய்யப்பட்டுள்ளனர். நீங்கள் வேலையை இழந்தால், குறிப்பிட்ட காலத்திற்கு நிதி உதவி பெறலாம். இதைச் செய்ய, Office Régional de Placement (ORP)-ல் (பிராந்திய வேலைவாய்ப்பு அலுவலகம்) பதிவு செய்ய வேண்டும். ORP கள் வேலையில்லாதவர்களுக்கு ஆலோசனை வழங்குவதோடு அவர்களின் வேலை தேடலுக்கு உதவுகின்றன.

## வேலையின்மை காப்பீடு

அனைத்து ஊழியர்களும் வேலையின்மை காப்பீட்டிற்கு (AC) பங்களிக்க வேண்டும். ஒவ்வொரு மாதமும், பணியாளரின் சம்பளத்தில் ஒரு பகுதி AC நிதிக்காக பிடிக்கப் படுகிறது. இது பங்களிப்பு நிதியில் பாதி. மறு பாதியை நிறுவனம் செலுத்தும்.
நீங்கள் வேலையை இழந்தால், வேலையின்மை நிதியிலிருந்து வேலையின்மை சலுகைகளைப் பெறுவீர்கள். வேலையின்மை சலுகைகளின் அளவு பல்வேறு அளவுகோல்களைப் பொறுத்தது.
நீங்கள் சுயதொழில் செய்பவரா?
அப்படியானால் வேலையின்மை காப்பீட்டிற்கு விண்ணப்பிக்க முடியாது.

## வேலையில்லாமல் இருக்கிறீர்களா? என்ன செய்ய வேண்டும்?

வேலையை இழக்கப் போகிறீர்களா? வேலையை இழந்துவிட்டீர்களா? அப்படியென்றால்,. மிக அருகிலுள்ள Office régional de placement (ORP) (பிராந்திய வேலைவாய்ப்பு அலுவலகத்தில்) கூடிய விரைவில் பதிவு செய்யுங்கள்.
**Jobroom[illegible].**
குறிப்பு: வேலையை இழக்கப் போகிறீர்கள் என்று அறிந்தவுடன் எங்களுக்குத் தெரிவிக்கவும். முடிந்த வரை, வேலையின்மையின் முதல் நாளுக்குள்.
ORP உங்களுக்கு தகவல் மற்றும் ஆதரவை வழங்கும்.

## Offices régionaux de placement (ORP) (பிராந்திய வேலைவாய்ப்பு அலுவலகங்கள்)

L'Office régional de placement (ORP) (பிராந்திய வேலைவாய்ப்பு அலுவலகம்) உங்களுக்கு ஆலோசனை வழங்கி, வேலையை விரைவாகக் கண்டுபிடிக்க உதவுகிறது.
நீங்கள் வேலையின்மை சலுகைகளைப் பெற்றால், நேர்காணல்களில் கலந்து கொள்ள வேண்டும். இது கட்டாயமாகும்.
ORP பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு படிப்புகள் மற்றும் திட்டங்களையும் வழங்குகிறது. உங்கள் தனிப்பட்ட சூழ்நிலையைப் பொறுத்து, சில கட்டாயமாகும், மற்றவை கட்டாயமில்லை.
நீங்கள் சுவிட்சர்லாந்தில் இன்னும் வேலை செய்யவில்லையா? வேலை தேடுகிறீர்களா?
நீங்கள் ORP இல் பதிவு செய்யலாம். உதாரணமாக, உங்கள் CV ஐ எவ்வாறு எழுதுவது என்பது குறித்த ஆலோசனைகளைப் பெறலாம். ஆனால், நீங்கள் வேலையின்மை சலுகைகளைப் பெற மாட்டீர்கள்.

மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.bonjour-jura.ch/ta/travail/lassurance-chomage

# டிப்ளோமாக்களின் அங்கீகாரம் மற்றும் முந்தைய கற்றலின் சரிபார்ப்பு

வெளிநாட்டு டிப்ளோமாக்கள் மற்றும் சான்றிதழ்கள் சுவிட்சர்லாந்தில் எப்போதும் அங்கீகரிக்கப்படுவதில்லை. சில தொழில்களுக்கு, டிப்ளோமா தேவைப்படுகிறது; அது கட்டாயமாகும். சில சந்தர்ப்பங்களில், உங்கள் வெளிநாட்டு டிப்ளோமா அங்கீகரிக்கப்படலாம். உங்கள் வெளிநாட்டு டிப்ளோமா அங்கீகரிக்கப்படவில்லையா? அல்லது ஒரு டிப்ளோமா குறைகிறதா? இந்த சந்தர்ப்பங்களில், நீங்கள் முந்தைய கற்றலைச் சரிபார்க்க விண்ணப்பிக்கலாம். இதன் பொருள் உங்கள் தொழில்முறை மற்றும் தனிப்பட்ட அனுபவங்கள் சரிபார்க்கப் பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதாகும்.

## டிப்ளோமா அங்கீகாரம்: ஒழுங்குபடுத்தப்பட்ட தொழில்களுக்கு

உங்களிடம் வெளிநாட்டு டிப்ளோமா உள்ளதா?
சில நிபந்தனைகளின் கீழ், உங்கள் டிப்ளோமாவின் அங்கீகாரத்திற்கு விண்ணப்பிக்கலாம். உங்கள் டிப்ளோமா அங்கீகரிக்கப்பட்டால், அது சுவிஸ் டிப்ளோமா அல்லது பள்ளிச் சான்றிதழுக்கு சமமாகக் கருதப்படலாம்.
சில தொழில்களுக்கு (சுகாதாரம், கல்வி மற்றும் சட்டம் ஆகிய துறைகளில்), சுவிட்சர்லாந்தில் பணிபுரிய வெளிநாட்டு டிப்ளோமாவின் அதிகாரப்பூர்வ அங்கீகாரம் தேவை. இந்தத் தொழில்கள் பாதுகாக்கப்பட்டவை.
எடுத்துக்காட்டாக, பின்வரும் தொழில்கள்: மருத்துவர், செவிலியர், ஆசிரியர் அல்லது வழக்கறிஞர்.
ஒரு டிப்ளோமா அங்கீகரிக்கப்படுவதற்கு (உங்கள் டிப்ளோமா அங்கீகரிக்கப்படுவதற்கான நடைமுறையை மேற்கொள்ள), பணம் செலவாகும்.
Secrétariat d’État à la formation, à la recherche et à l’innovation (SEFRI) (கல்வி, ஆராய்ச்சி மற்றும் புதுமைக்கான தேசிய செயலகத்தின்) Reconnaissance.swiss வலைத்தளம் தொழிலைப் பொறுத்து பின்பற்ற வேண்டிய நடைமுறையை விளக்குகிறது. அது தொடர்புடைய துறைகளுக்கான தொடர்பு விவரங்களையும் வழங்குகிறது.

## நிலைச் சான்றிதழ்: ஒழுங்குபடுத்தப்படாத தொழில்களுக்கு

பெரும்பாலான தொழில்களுக்கு, சுவிட்சர்லாந்தில் பணிபுரிய அதிகாரப்பூர்வ அங்கீகாரம் தேவையில்லை.
எடுத்துக்காட்டாக, பின்வரும் தொழில்கள்: சமையல்காரர், மெக்கானிக், ஐடி நிபுணர், கிராஃபிக் டிசைனர், வயது வந்தோர் கல்வியாளர், முதலியன.
இந்தத் தொழில்களுக்கு, நீங்கள் நிலைச் சான்றிதழைக் கோரலாம். இந்தச் சான்றிதழ் சுவிஸ் கல்வி முறையில் உங்கள் வெளிநாட்டு டிப்ளமோவின் மதிப்பைக் காட்டுகிறது. இந்தச் சான்றிதழ் உங்கள் வேலை தேடலிலும் பயனுள்ளதாக இருக்கும்.
Secrétariat d’État à la formation, à la recherche et à l’innovation (SEFRI)(கல்வி, ஆராய்ச்சி மற்றும் புதுமைக்கான தேசிய செயலகத்தின்) reconnaissance.swiss வலைத்தளம் பயனுள்ள தகவல்களை அனுப்புகிறது.

## முன் கற்றலின் சரிபார்ப்பு

டிப்ளமோ இல்லையா?
உங்கள் தொழில்முறை பின்னணி, தொழில்முறை அனுபவம் மற்றும் தனிப்பட்ட அனுபவம் ஆகியவற்றை அங்கீகரிக்கப்பட முயற்சி செய்யலாம். இந்த அனுபவம் அனைத்தையும் ஒரு தொழில்முறை டிப்ளமோவின் (CFC அல்லது AFP) ஒரு பகுதியாகவோ அல்லது முழு டிப்ளமோவாகவோ அங்கீகரிக்கப்படலாம். இந்த செயல்முறை முன் கற்றலின் சரிபார்ப்பு என்று அழைக்கப்படுகிறது.
ஜூரா காந்தோனின் Centre d'orientation scolaire et professionnelle (COSP) (பள்ளி மற்றும் தொழிற் கல்வி பற்றிய வழிகாட்டல் மற்றும் கல்வி உளவியல் மையம்) இந்த சரிபார்ப்பு பற்றி உங்களுக்கு தகவல் கொடுக்கும். இந்த செயல்முறை குறித்து அது உங்களுக்கு ஆலோசனை வழங்கும், இது இலவசம்.

## படிப்பு முடித்ததற்கான சான்றிதழை மீண்டும் பெறுதல்

உங்களுக்கு தொழில்முறை அனுபவம் உள்ளதா, ஆனால் அங்கீகரிக்கப்பட்ட டிப்ளமோ அல்லது படிப்பு முடித்ததற்கான சான்றிதழ் இல்லையா? நீங்கள் ஒரு தொழிற்கல்வி பயிற்சி திட்டத்திற்கு சுவிஸ் படிப்பு முடித்ததற்கான சான்றிதழைப் பெறலாம்.
சான்றிதழ் திரும்பப் பெற, அதன் செயல்முறை உங்கள் பயிற்சி, படிப்பு முடித்ததற்கான அனுபவம் மற்றும் வயதைப் பொறுத்தது. எல்லா சந்தர்ப்பங்களிலும், நீங்கள் பிரெஞ்சில் (நிலை B1/B2) நல்ல தேர்ச்சியைப் பெற்றிருக்க வேண்டும்.
மேலும் தகவலுக்கு, Centre d’orientation scolaire et professionnelle (COSP) (பள்ளி மற்றும் தொழிற் கல்வி பற்றிய வழிகாட்டல் மற்றும் கல்வி உளவியல் மையத்தை) . தொடர்பு கொள்ளவும் இது இலவசம்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.bonjour-jura.ch/ta/travail/reconnaissance-des-diplomes-et-validation-des-acquis-dexperiences